# உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance.*

௨. புத்தகம் சஞ்சிகை. ௰௧.] ௲௮௱௪௨ ௵. ஆனி. ௨, தேயதி வியாழக்கிழமை, Thursday, June, 2, 1842. [Vol. II. No. 11.


## பாண்டிவள நாட்டுச் சரித்திரக் குறிப்பு
### Historical sketch of the Pandian Kingdom.

(Continued from page 109.)

மிருந்த சிவபக்தனாகிய சோழராசாவினுடைய குமாரத்தி வனிதாசுவனி என்கிறவளைக் கூன்பாண்டியன் விவாகம்பண்ணினான். அவள் தன் மதத்திலே பிரபலவுபதேசியாகிய ஞான சம்பந்தரை மதுரைக்கழைப்பித்தாள். அந்தச் சமையத்திலே கூன்பாண்டியனுக்குச் சுரங்கண்டு அதற்கு அவனுடைய சைனக்குருக்கள்மார் என்ன ஔஷதங்கள் என்ன மந்திரங்கள் பிரயோகம்பண்ணியும் அனுகூலமில்லாமற் போனதைப் பற்றி இவனுக்கும் ஞானசம்பந்தருக்குஞ் சிநேகஞ் சீக்கிரத்திலேபண்ணிவைக்கும்படிக்குச் சமயம் நேரிட்டது. ஞானசம்பந்தர் இவனுக்குச் சொஸ்தப்படுகிறதினாலேயே தன்னுடைய மதத்தின் பெருமையைப் பரிட்சைகாட்டி வெற்றியடைகிறேனென்று மேற்போட்டுக்கொண்டார். இவருக்கு விரோதிகளானவர்கள் அந்தப் பவுருஷத்தை அங்கிகாரம்பண்ணினார்கள். சைவ சம்பந்தமாயிருக்கிற வைத்திய பாண்டித்தியமானது தங்கள் எண்ணத்துக்கு அதிகப்பட்டுப் போகவே அவர்கள் தோற்றுப்போனார்கள். அதின்பேரில் ஞானசம்பந்தர் சொஸ்தப்படுத்தினது மந்திரபலத்தினாலேயென்று சொல்லி அவர்கள் இதரமான பரிட்சைகள் காட்டச் சொன்னார்கள். அதற்கு ஞான சம்பந்தர் தடையில்லாமல் ஒத்துக்கொண்டார். அதன் பேரிலே இருதிறத்தாரும் ஏட்டிலே தங்கள் தங்களுடைய திருமந்திரங்களை எழுதி எவர்களுடைய ஏடானது நீரோட்டத்துக்கெதிரேறி மிதந்துபோகுமோ அவர்களுடைய மந்திரமானது கெலிச்சதாகக்கொள்ளவேண்டியதென்று வைகையாற்றில்விட்டார்கள். அப்பொழுது சைவமந்திரம் மேலிட்டுத் திருவேடகமென்கிற ஒரு ஸ்தலமட்டுமெதிரேறிற்று. அவ்விடத்திலே சிவனொரு விருத்தாப்பியவேடங்கொண்டு அந்த ஏட்டைச் சலத்தினின்றெடுத்து மறுபடியும் ஞானசம்பந்தரிடத்திற் கொண்டுவந்து கொடுத்தார். இப்படி நடந்த காரியத்தை எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கும்பொருட்டு மேற்படி ஏட்டைக்கொண்டுவந்து கொடுத்த அவ்விடத்திலே இராசாவானவன் ஒரு பட்டணமேற்படுத்தித் திருவேடகநாதருக்கென்றொரு கோவிலுங் கட்டிவைத்தான். அதின் பேரிற் சமணர்கள் (௮௲) பேர்வரைக்குந் தெண்டிக்கப்பட்டுந் துரத்தப்பட்டும் போனார்கள். கூன்பாண்டியன் தான் சைவனாகிறதற்குமுன்னே கூனன் என்று சொல்லப்படுகிற தன்னுடைய பேரின்படியே அங்கவீனனாயிருந்து சைவமந்திர உபதேசம் பெற்றுக்கொண்டவுடனே கூன் நிமிர்ந்து அதுமுதற் சுந்தரபாண்டியன் என்னும் பேரைப்பெற்றான். அதுமுதல ஞானசம்பந்தர் தான் மறுபடியும் உத்தரித்த மதத்துக்குப் பிரதான குருக்களாக ஸ்திரப்படுத்தப்பட்டார். மேலும் அவர் முக்கியமான ஒரு மடமேற்படுத்தினதாகவும், அது நாளதுவரையில் இருக்கிறதாகவுங் காண்கின்றது. அதுவுமன்றிச் சம்புத்திபத்தைச் சேர்ந்ததெட்சண திசையில் சைவ மதஸ்தர்களாகிய பிரமசாரிகளிருக்கும்படியாகவும், அவர்களுக்குத் தலைமுறைதலைமுறையாக ஞானசிவாசாரியரென்கிற பேர்பெற்ற ஒரு தலைவனுமிருக்கும்படியாகவும், அநேக மடங்கள் கட்டியிருக்கிறதாகவுங் காணப்படுகின்றது. இந்தத் திருட்டாந்தத்துக்குமுக்கியமாயும் ஆதியுமாயிருக்கிற ஸ்தானமானது, திருநெலவேலியிலே ஏற்பட்டிருந்ததாகவும். அது இப்பொழுது அழிந்துபோனதாகவுஞ் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்தத் திருக்கூட்டத்துககு நாளதுவரையிலும் வரிசையாய் (௱௰௯) பேர் தலைவர்களானார்களென்றுஞ் சொல்லுகிறார்கள். இந்தத் திருக்கூட்டம ஆதியிலே உண்டானதுமுதற்கொண்டு பத்துப் பதினொரு சதகங்களாயிருக்கவேண்டுமென று நம்பவேண்டியது. மேலும,கிறிஸ்தாண்டின் எட்டாம் அல்லது ஒன்பதாஞ் சதகத்திலேதான் கூன்பாண்டியனுடைய காலமென்று சொன்னதுஞ் சரிப்படுகின்றது.

இந்தப்பிரகாரம் நவினகாலங்களுக்குச் சமீபமென்கிறது சரித்திர நிஷகரிஷையிலே சேர்ந்ததாயிருக்கவில்லை. மிகவுஞ் சங்கிரமமாய்ச் சொல்லுகிறபோதுமான மட்டுந் தெளிவாய் இருக்கின்றது விபரீத்துச் சொல்லுகிறதோ பூர்த்தியாயிருக்கவில்லை. ஒன்பதாஞ் சதகத்திலும் பத்தாஞ் சதகத்திலுஞ் சோழராசாக்கள் பரதவருஷத்திலே வெகுதூரமட்டுக்குந் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தித் தங்கள் தேசத்துக்கடுத்த பாண்டிய தேசத்தினுடைய அதிகாரத்தைச் செல்லவொட்டாமற் பண்ணினார்கள். அவர்களுடைய அரசாட்சிக்குப் பின்பு மைசூர்தேசத்துவல்லாளராசாக்களானார்கள்.

அந்த வல்லாளர்கள் துரைத்தனத்துக்குமுன்னே பாண்டியதேசத்தின் பூர்வீகமான பெருமைகளும் சோழ தேசத்தின் பிரதாபங்களும் மறைந்துபோய்விட்டன. வல்லாள ராசாக்கள் பலவீனப்பட்டதினாற் பழைய துரைத்தனக்காரருக்கு அவர்களுடைய பூர்வீகமான அதிகாரத்தைக் கொடுப்பது கூடாமற்போயிற்று. வல்லாள ராசாக்கள் பலவீனப்பட்டிருந்த காலத்தில் அவர்களுக்குள்ளாயிருந்த தேசத்தார்களும், அதிகாரஸ்தர்களும் தலையெடுத்துச் சுவாதீனரானார்கள். இப்படியெல்லாம் மாறுபட்டுப்போனதேதினாலெனில், பதினான்காஞ்சதகத்தில் துலுக்காணத்தார் சண்டைதொடுத்ததினால் விளைந்த கலகத்தினாலேயும், தடுமாற்றத்தினாலேயும்,மேற்படி துலுக்காணத்துக்கு அடுத்தாற்போல விசைய நகரத்தி ராசாக்களுடைய அதிகாரம் வந்துவிட்டதினாலேயும் கடைசியில் விசைய இராசாக்கள் பாண்டிய இராசாக்களுடைய ஸ்தானத்திற் பதினாறுஞ்சதகத்து ஆரம்பத்தில் நிலைத்துப்போனதினாலேயும், உண்டானதாயிருக்கின்றது. இவர்களுடைய கதைகளெல்லாஞ் சற்றேக்குறையத் திட்டமாயும் ஒத்ததாயுமிருக்கிறபடியால் மதுரை தேசத்தின் சரித்திரங்களின் முடிவுந் தெளிவாகக் காண்கின்றது.இந்த இராசாக்களைக்குறித்துச் சொல்லுகிற காரியங்களை எல்லாம விபரமாய் எழுதுகிறதற்கு முன்னமே கூன்பாண்டியன் துரைத்தனத்துக்கும் மதுரை நாயகமார்களுடைய பிரபுத்தனத்துக்கும் மத்தியில் நடந்த விருத்தாந்தங்களை எல்லாம் பூர்த்தியில்லாவிட்டாலுந் தெரிந்த மட்டுஞ் சொல்லவேண்டியதாயிருக்கின்றது.

(இன்னும் வரும்.)

## Life of Mohammed.—மகமதுவின் சரித்திரம்.

### ௰௧. அதிகாரம்.

[*An Embassy sent to the Prophet from Medina—Enters into a league with them—Sends thither a Missionary—Another deputation sent to proffer him an asylum in that city—His enemies renew their persecutions—Determines to fly to Medina—Incidents on the way—Makes a solemn entry into the city—Apostate Christians supposed to have joined in tendering him the invitation.*]

மக்கநகரியில் மகமதுநபி அனைவராலும் நகைக்கப்பட்டும் பகைக்கப்பட்டும் மதினாநகரியில் அவருடைய மதம்பிரபலியமாயிற்று. மதினாநகரி பூருவகாலத்தில் (Yatreb) யேத்திரேப் என்றபேராயழைக்கப்பட்டு மக்கநகரியிலிருந்து கிட்டத்தட்ட (௭௰) மயில்தூரத்துக்கப்பாற்(Hejaz) கிச்சாஸ்என்ற மாகாணத்தினுத்தராந்தத்திற் கிடக்கின்றது. இவ்விடத்திலிருந்து முதன்முதலெண்ணுமெழுத்தும்பற்பல சாத்திர சூத்திர விற்பன்னங்களுமுண்டாயின. இவ்விடத்தில் அஞ்ஞான அரபியரும், யூதரும், கிறிஸ்துமதபேதிகளுங் குடியிருந்தார்கள். இக்காலத்தில் இப்பட்டினத்திலே கேறிசிற்றிஸ்(Harejites)ஓசிற்றிஸ் (Awsites)என்ற இருவகைக் கோத்திரத்தாருக்குள்ளும் அநுதிதொடுத்துச் சந்தானச்சச்சரவுகள்நடந்தன. கேயாபாகோவிலுக்கு யாத்திரைபண்ணின அநேகர் மகமதுபண்ணினபிரசங்கத்தைக்கேட்டதினால் மகமதுமதாநுசாரிகளாகி மகமதுவுக்கு உயிர்த்துணையான சீஷர்களாயிருந்தார்களென்பதற்கத்தாட்சியென்னவெனில மகமது நவமதத்தைப் பிரபலியப்படுத்தின(௰௨ம்)வருடத்திலே(௰௨)பேர் மக்கத்திலிருந்து அதற்கு உத்தர திசையிலிருக்கிற அல் அக்கேபா(Al Akaba)என்றமலையில மகமதுவண்டையில் வந்து பண்ணின பொருத்தனையாவது. "நாங்கள்

இன்றுமுதற்றெடுத்துவிக்கிரகவணக்கத்தைவிடுவோமென்றும்களவும் விபசாரமுஞ் செய்யமாட்டோமென்றும், அஞ்ஞான அரபியர் தங்கடங்கள் பிள்ளைகளைக்கொன்றதுபோல நாங்களுங் கொல்லமாட்டோமென்றும், யாதொருவரைப் புறங்கூறுமல் நியாயமான காரியங்களிலும் உமக்குக் கீழ்ப்படிவோமென்றும்" சபதம்பண்ணிஞர்கள். இப்படியவர்கள் பொருத்தனை பண்ணிக்கொண்டதிஞல் மகமது தம்முடைய நவமதத்தின் சத்துசாரத்தையும், செய்கைக்குரித்தரன வொழுங்குகளையும் அவர்களுக்குப் போதிக்கும்படி தமது சீஷரிலொருவராகிய மேசப் இப்ன் ஒமேயர் (Masab Ebn Omair) என்பவரை அவர்களிடத்துக்கனுப்பினதிஞல் அவரும் அநேகரை மகமதுமதாநுசாரிகளாக்கிஞர். அவ்வநுசாரிகளில் ஒசேயிட் இப்ன்கோடீரு(Osaid Ebn Hodeira)என்பவர் அந்நகரிக்கு முதலாளியும், சேயட் இப்ன் மோவட் (Saad Ebn Moadh) என்பவர் ஒசிற்றிஸவருணத்துக்குப் பிரதானியுமாயிருந்தார். காரியத்தைப்பார்த்தால் அப்பட்டினத்தில் மகமதுமதாநுசாரிகளில்லாதவீடொன்றுகுதவில்லையென அறியவந்தது.

பிறகு (௰௩ம்) வருடத்தில் மக்கத்திற்சனங்களொருமிக்கத்திரண்டு மகமதுவை விரோதித்துப் பகைத்ததை மேசப் என்பவரறியவந்தகாலையில் அவருக்கு உதவிசெய்யும்படி மதாநுசாரிகளில்(௭௫) புருடர்களையும் (௨) இஸ்திரிகளையும் வேறுபல அவிசுவாசிகளையுங் கொண்டுவந்து அவர்கள் மகமதுவுக்குப் பண்ணினபொருத்தனையாதெனில் உம்மையனைவருந் தள்ளிஅப்புறப்படுத்திப்போட்டாலும் நாங்களோ உம்மையெங்களொன்றுகூட்டான ஆளாக்கி உமக்குக் கீழமைந்து உமதுயிரிறுமளவும் எங்கள் பெண்சாதி பிள்ளைகளைப்போல உம்மையனைத்திலுமிருந்து விலக்கிக்கொள்வோம். உம்முடைய புதுத்துணைவர்களாகிய நம்மைக் கைவிடுவீரோவென்று கேட்டதற்கு மகமது சொன்னது எல்லாப்பொருளுமெங்களுடுவே சாதாரணமாயிருக்கின்றன. உங்களுதிரமென்னுதிரம்போலவு முங்களுக்கு வருகிறகேடுகள் நமக்கு வருகிற கேடுகள் போலவுமிருக்கும். நானுங்கள் மித்துருவு முங்கள் சத்துருவுக்குச் சத்துருவாயுமிருப்பேன். அதற்கு மாறுத்தரமாக அவர்கள் சொன்னது, நாங்களுமக்காகச் சாவவேதுவாயிருந்தால் அப்போ எங்களுக்கென்னகிடைக்கும். அதற்கு மகமதுசொன்னது, உங்கள் பங்கும் பலனும் பரதீசுவே என்றூர். இப்படியே அவர்கள் பொருத்தனைபண்ணிக்கொண்டு போனபிறகு, கிறிஸ்துநாதர் (௰௨) சீஷர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்குத்தரமளித்ததுபோல் மகமதுவும் (௰௨) பேரைச் சீஷராக்கி அவர்களுக்கதிகாரத்தையுங் கொடுத்தார்.

ஆபுதாலப் என்பவருடைய பட்டத்துக்கு ஆபுசோபியன் (Abu Sophyan) என்பவரிராசாவாக வந்தவுடனே அவர் மகமதுவையும் அவர் கூட்டாளிகளையும் படுசூரணம்பண்ணும்படி கோறிஸவங்கிஷத்தாரையும் அவர்கள் துணைவரையும் அழைப்பித்தாலோசனைபண்ணித்தாங்களெண்ணின புனைசுருட்டைமுடிக்கும்படி தங்களுடனுடம்படிக்கைபண்ணின ஒவ்வொருகோத்திரத்துக்கொவ்வொரு.ஆளை நியமித்து ஒவ்வொரு வாளையும் அவர்கள் கைகளிற் கொடுத்தெத்தனமாயிருந்தார்கள். இப்படியவர்களெண்ணியிருக்குங் கொடும்பாதக யோசனையைப்பற்றித் தனக்குக் காபிரியேல் தூதன் சொல்லியிருக்கிறதாக மகமது சொல்லுகிற தென்னவெனில், உமக்கு (மகமதுவுக்கு) விரோதமாகச் சனங்களெழும்பி உம்மைக்கட்டவும் மறியலிற்போட்டு உமதுயிர்வதைக்கவும் பட்டணத்தைவிட்டும்மை யகற்றவும் யோசனைபண்ணிஞர்கள். ஆஞலும் பராபரனே அவர்களுக்கு விரோதமாக யோசனைபண்ணிஞர். இந்தக் கொடும்பாதக யோசனையிலிருந்து விலக்கிக்கொள்வதற்கு வழியென்னவாகில், மகமது அந்நகரைவிட்டதிசீக்கிரந் தப்பி மறுதிசையோடுவதே நலமென்று தூதன் சொன்ஞராம். உடனே ஆலி என்பவர் மகமதுவை ஒரு சீலையிற்சுற்றித் தன் தலைமாட்டில் வைத்ததிஞல் அவர் வீட்டை முற்றிக்கைபோட்டு மகமதுவைப் பிடிக்கவந்த ஆட்களின் கண்ணுக்ககப்படாமல் ஆபூவுக்கர் என்பவருடைய உதவியிஞல் மகமது பட்டணத்தைவிட்டுப் பதுங்கியோடித் தோர் (Thor) என்ற கெபியிற்சேர்ந்து அவ்விடத்தில் மகமதுமார்க்கத்தினிமித்தம் ஒழித்தோடிப்போயிருந்த வேறிருவரையுங் கண்டார். மகமதுவைக் கொல்லும்படி தொடர்ந்தவாகள் இவரிருந்த கெபியைப்பார்த்து அதிலே புருக்கூட்டையும், பொட்டுப்பூச்சி நூலையுங்கண்டு யாதொருசனமு மிக்கெபியிலிருக்கமாட்டார்களெனவெண்ணித் தொடர்ந்தவர்களும் போய்விட மகமது கெபியிலிருந்த மற்றிரண்டுபேருக்குஞ் சொன்னது நீங்கள் நபிக்கு ஒத்தாசைசெய்யாவிட்டிலும் மெய்யாகவே ஆண்டவன் அவருக்குதவி செய்வார். பிறகு மகமதுவும் அதி சீக்கிரங் கெபியைவிட்டு அடைக்கலப்பட்டினத்திற் (௰௬) நாளுக்குள் வந்து சேர்ந்து கோபா (koba) என்ற ஊரிலிருந்த காலையில் (௫௱) சனம் அவரைப்பிடித்துக் கொல்லும்படிவந்து பதிவிருந்தாலும் அவரைக் கண்டவுடனே சந்தோஷமாய் அவரை மினவிக்கொண்டார்கள் உடனே மகமது ஒரு ஒட்டகத்திலேறி மக்கநகரியையடைந்தார்.

மகமது ஓடிப்போன ஓட்டத்துக்கு அரபிபாஷையிலே கேச்சிரா (Hejira or Hejra) என்றுபேர். இது கிறிஸ்துநாதர் பிறக்க (௬௱௨௨) வருடத்துக்கு முன்னடந்தது. அவ்வேளையில் மகமதுவுக்கு வயது (௫௩) மகமது ஒட்டகத்திலேறி ஊர் சேர்ந்த வேளையிற் சிலபாசாண்டக்கிறிஸ்தவர்கள் அவரை மினவி அழைத்தார்கள் என்றுதோன்றுகின்றது.

## தென்சமுத்திர தீவுகளில் நடந்த சங்கதி.

**[Missionary Enterprises in the South Seas.]**

௯௯ம் பக்கத்தினின்று.

கிறிஸ்துமார்க்கம் இந்த (இராயதோங்கு) தீவாருக்குட் பரம்புகிறதற்கு இருந்த பாரமான தடைகள் நீங்கப்பட்டாலும் அவர்கள் விக்கிரகாராதனையைக் கொண்டாடின காலத்திலே அவர்களுக்குள்ளிருந்த தேச வழமைகளும், கட்டளைச் சட்டங்களும், பழக்கம் பரிசனைகளும் இன்னுஞ் சற்றே தடைகளாயிருந்தன. (தகத்தியன்) தீவு (சேசாயுத்தி) தீவுகளிலுமுள்ள குருமார் கொஞ்சக்காலத்துக்கு முன்னே புது ஒழுங்குகளையும் புது நியாயப் பிரமாணங்களையுமுண்டாக்கி மார்க்கத்துக்கிடறில்லாமல் வழங்கிவரப்பண்ணிஞர்கள். ஆகையால் நாங்களும் மார்க்க வளர்த்திக்காகவுஞ்சனங்களுடைய நன்மைக்காகவும் வாடிக்கையாயிருக்கிற பழக்கங்களை மாற்றிப்போடுவது தகுதியாயிருக்கின்றதென்று கண்டு இதைக்குறித்துப் பேசிஞேம். ஏனென்றுற் கிறிஸ்துமார்க்கம் அவர்களுக்குள் அறிவிக்கப்படமுன்னம்ம குற்றஞ் செய்தவர்களை ஆக்கினைபண்ணி அவர்களிடத்திற் பழிவாங்குகிற விதம் மிகவுங் கொடுமையாய்க் காணப்பட்டது. ஒருவனை ஒருவன் அடித்தால் அடிபட்டவனுடைய சினேகிதர் எல்லாருமாய்க் கூடி அடித்தவன் வீட்டுக்குப் போய் அவனுக்குள்ளதெல்லாவற்றையும் படுத்தபாய் முதலாய்க் கொள்ளையிட்டுக்கொண்டுபோகிறதுமல்லாமல் அவன் வீட்டைத் தகர்த்து அவன் வளவிலுள்ள மரந்தடிகளெல்லாவற்றையுங் கூடத் தறித்துக் கொட்டிப்போடுவார்கள். ஒருவன் களவெடுத்தால் இராசாவின் உத்தரவிஞலே அவனைப் பிடித்து அந்தவிடத்திலேதானே கொலைசெய்து அவன் சடத்தைத் துண்டித்துத் துண்டங்களைக் குறிக்கப்பட்ட இடங்களிலே தூக்கிவைப்பார்கள். களவெடுக்கிற பையன்களைக் கண்டால் அவர்கள் காலிலே பெரிய கல்லைக் கட்டிக் கடலிலே தள்ளிவிடுவார்கள். இப்படி ஒரு காரியம் ஒரு முறையிலே சம்பவித்தபோது அந்த ஊரிலே குதித்த போதகர்களிலொருவர் ஒரு பையனைக் கடலிலே விழுந்தெடுத்துத் தப்பவைத்தார்.

இவ்வித அற்ப குற்றங்களுக்கு அவ்வளவு கொடிய ஆக்கினைபண்ணுவது முறையல்லவென்று அவ்வூர்ப் பிரதானிகளுமுணரவேதுவாயிற்று. ஆகையால் மார்க்கம்பரம்புவதற்கு அதின் முறைமைகளுக்கிணங்கிய புதுவொழுங்குகளுண்டாக்கப்படுவது அவசரமென்று கண்டதிஞலே பிரதானிகளும் நாங்களுமொருமிக்கக் கூடிக் கிறிஸ்துமார்க்கப் போதனைக்கு வழுவின்றி மனுஷர் ஒருவரை ஒருவர் இனபட்சமாய்ச் சினேகிக்கவும் தீங்குசெய்யாதிருக்கவும் தேறுதலடைந்த சாதிகளுக்குள்ளிருக்கிறகோட்டு நியாயப்பிரமாணங்களைப் போல நாங்களுமொன்றை ஏற்படுத்திச் சனங்களுக்குட் பிரபவியம்பண்ணிஞேம.

இவ்விதமாக நாங்களுண்டுபண்ணின கட்டளைச் சட்டங்கள் சில பொல்லாத வாலிபருக்குப் பிரியமாயிராததிஞலே அவர்கள் இந்தக் கட்டளைச்சட்டங்களையும் அரசாட்சியையும் புரட்டி என்னையும் என் கூட்டாளியாகிய (பிற்றுமனையும்) கிறிஸ்துமார்க்க வளர்ச்சிக்குதவியாயிருந்த (தமதோ) என்னப்பட்ட அந்த ஊர்ப்பிரதானியையுங் கொலைசெய்துபோடயோசனையாயிருந்தார்கள்.

அவர்கள் பண்ணின யோசனையை எப்படி நிறைவேற்றநினைத்தார்களெனில் நாங்கள் இருக்கிற இடத்துக்குக் கிட்ட ஒரு சிறுத்தீவிருந்தது. அதற்கு இரண்டு மூன்று கிழமைக்கொருக்கால் ஞாயிற்றுக்கிழமை முறைகளில் நான் போய்ப் போதிவிக்கிறது வாடி

க்கையாயிருந்ததினாலே அங்கே போகிறதற்கு வாடிக்கையாகச் சனிக்கிழமைகளிற் புறப்படுவேன். எப்போதும்போல நான் புறப்படவெண்ணியிருக்கையில் என்னை அந்தத் தீவிலே கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு வள்ளத்தைத் தாங்கிக்கொண்டுபோக நாலு கூலிக்காரர் வந்துநின்றார்கள். இவர்கள் அந்தச் சதியோசனைக்காரரின் கூட்டாளிகள். இவர்கள் நாலு பேரும் என்னை நடுக்கடலிலே தள்ளிப்போடவும் அவ்வேளையிலே இவர்கள் கூட்டாளிகள் வீட்டிலிருக்கப்பட்ட (திற்கல்) என்னப்பட்ட குருவையும் தமதோ என்னப்பட்ட பிரதானியையும் ஊரிலேதானே கொலைசெய்துபோடவும் எண்ணியிருந்தார்கள். ஆகிலுந் தேவ செயலினாலே இந்தமோசத்திலிருந்து தப்பிக்கொண்டேன். எப்படியெனில், நான் பயணத்துக்கு ஆயத்தப்படுத்தியிருந்த வள்ளத்துக்குக் கிசில்பூசி வன்னங்கொடுத்ததினாலே என்னுடையவெண்ணம் போலச் சனிக்கிழமை போவதற்கு அந்த வன்னத்துக்குச் சேர்த்த எண்ணெய் காயாமலிருந்தது. பயணம் இப்படித் தாமதித்ததினாலே என்னைத் தாங்கிக்கொண்டுபோகவந்த சதியோசனைக்காரர் நாலுபேரும் அந்த நாளிலே அடிக்கடிவந்து "ஐயா! பயணம்புறப்படுகிறதில்லையோ, ஐயா, புறப்படுகிறது தானே" என்று மெத்தப்பிரயாசப்பட்டார்கள். நான் இவர்களுடைய யோசனையை யறியாததினாலே, சுவாபமானபேச்சாய் வள்ளத்துக்குக் கொடுத்திருக்கிற மை காயவேணுமென்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டேன்.

இந்தச் சதியோசனைக்காரர் தாங்கள் பண்ணியிருந்த யோசனையின்படி காரியங்கள் நடக்கமாட்டாதென்றெண்ணி இரண்டொரு நாளுக்குப்பின்பு வெளியரங்கமாய்ப் பொல்லாங்கு செய்யத்துணிந்து தங்களுக்குளொரு வாலிபனைப்பிடித்து இலை குழையினாலே அவனுடைய தலையையுஞ் சிவப்புக் கறுப்புமுதலிய சட்டைகளினாலே அவனுடைய மேனியையும் பொய்வேஷம்போலச் சோடித்துக் கையிலே ஒரு பட்டாக்கத்தியையுங் கொடுத்து நாங்களிருக்கிற வீட்டுக்கனுப்பினார்கள். இவன் நாங்கள் மத்தியானச் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டிருக்கிற வேளையிலே முத்தத்திலே வந்து நின்று "அந்தப் பன்றியெங்கே? அதின் குரவளையை யிப்பொழுது அறுக்கிறேன், அந்தப் பன்றியெங்கே? அதை இந்த நிமிஷமே கொல்லுகிறேன்" என்று சத்தமிட்டுச்சொல்லிக்கொண்டு கையில் வைத்திருந்த கத்தியையுருவிச் சுழற்றிச் சுழற்றிக் கூத்தாடினான். இவனுடைய மாதிரி யெனக்கெரிச்சலாய்க் காணப்பட்டதினாலே நான் சாப்பாட்டைவிட்டெழும்பி மோசமொன்றும் வராதென்றெண்ணிக்கொண்டு இவனுடைய கூக்குரலையும், நடனத்தையும மறிக்க வெளிக்கிட்டேன். அப்படியே நான் வெளிக்கிடக் கதவுக்குள்ளே வருகையிற் குருப்பட்டத்துக்கு ஆயத்தமாயிருந்தவொருவன் ஓடி மூச்சில்லாதவனாய் வாசலிலே வந்து என்னை யுள்ளேபோகத்தள்ளி "ஏன் வெளிக்கிடுகிறீர். ஏன் உம்முடைய ஜீவனை மோசத்துக்கேற்படுத்துகிறீர்." உம்மையல்லோ பன்றியென்று சொல்லுகிறான், உம்முடைய ஜீவனை யெடுத்துப்போட இப்பொழுது இவனிங்கே வந்து நிற்கிறானென்று சொல்லிக் கதவைப் பூட்டினான். அந்தப் பொல்லாத வாலிபர் பண்ணியிருந்த சதியோசனையையெல்லாம் இவனிந்த வேளையிலே எனக்கு வெளிப்படுத்தினான். இந்தப் பிரகாரமாக அவர்கள் பண்ணியிருந்த யோசனை எனக்குத் தெரியாததினாலே நான மோசத்துக்கேதுவாயிருந்த இரண்டுகாலிலுங் கத்தா என்னுடனே கூடவிருந்தாரென்றும அதினாலே இந்தத்தீவாருக்கினனுஞ் சிறிதுகாலமாக நன்மைசெய்யும்படிக்கு என் ஜீவனைத் தப்புவிக்கக் கத்தருக்குச் சித்தமாயிருந்ததென்றெண்ணிக்கொண்டு அவருக்குபகாரஞ்செலுத்தினேன். மற்றநாள் இந்தச் சதியோசனைக் கூட்டத்திற்சேர்ந்திருந்த அந்த நாலுபேரையுங்கொன்றுபோட அந்தத் தீவிற் பிரதானி யெங்களை அழைத்து யோசனைபண்ணினார். நாங்களோ அவர்களுக்காகப் பலவகையான நியாயங்களையுஞ் சொல்லி அவர்களைத் தப்பவைத்தோம. குற்றவாளிகளை ஆக்கினைபண்ணும்படி கிலகிறுமினல் நியாயப்பிரமாணங்களும் உண்டுபண்ணப் படவேணுமென்று அந்தப் பிரதானி யெங்களைக் கேட்டுக்கொண்டபடியினாலே நானுந் (திற்கல்) ஐயருமாகக் கூடியோசனைபண்ணிச் சனங்களுக்குத் தெளிவாய் விளங்கத்தக்கதாகவும், அந்தத் தீவாருடைய காரியங்களுக்கிசைந்த பிறகாரமாகவுமுண்டாக்கிக்கொடுத்தோம். அதை அந்தப் பிரதானியுஞ் சனங்களிற் சிலரும் கூடிவாசித்துப் பின்பு மிகுந்த சந்தோஷத்துடனே ஏற்றுக்கொண்டார்கள்.

(To be Continued.)

## மகாத்துமாவான கழுதை.

### (The Canonized Ass.)

அபிசீனியாவிலுள்ள மாசோவா தேயத்துக்கு வியாபார முகாந்தரமாய்க் கொந்தார் தேயத்திருந்து தன் கூட்டு வியாபாரிகளுடன் மகமது வருத்தக விருத்தாப்பியனொருவன் போகையில் தைக்கிரியென்னுநதி பெருக்கெடுத்திருந்ததால் எமேசன் நாட்டு வழியாய்ப் போகவேண்டிவந்தது. மாசோவா தேயத்துக்கொன்பது முறை பயணம்பண்ணிய பேர்க்கியென்னுங் கழுதையொன்று அவனிடத்து நின்றது. அது மிகவும் இளைத்துக் கிழடுபற்றிப்போனதால் ஒரு நாள் இராத்திரி இறந்துவிட, அதற்காய் அவன் துக்கித்துத் தன்னோடொன்பது முறைபயணம் பண்ணிற்றென்று மற்றவர்களுக்குஞ் சொல்லி அதைக் கழுதைப் புலி தின்றுபோடாமல் ஒரு குழிவெட்டி அதிற் சேமம்பண்ணும்படி அவர்களுஞ் சற்றுத் துணை செய்ய வேண்டுமென்று கேட்க, அவர்களுந் தாங்கள் படங்குவீடுகளை விரித்துக்கொண்டிருந்த மலையருகே கற்பாரிலோர் குழியை வெட்டினார்கள். அப்போது கற்பாரிலிருந்து நீரூற்றொன்று புறப்பட்டது. அதிலே கழுதையைச் சேமம்பண்ணிக் கற்களை மேலே குவித்துப் பின்பு பயணம்போய்விட்டார்கள். சில நாளுக்குப் பின் அவ்வூரிடையர் புதிதாயொரு கற்குவியலையும் அருகே நீரூற்றையுங் கண்டு ஊர்களிலே போய்ச் சொல்ல அவ்வூர்க் குருக்கள் அங்கே வந்து கூடி மோட்சத்திலேயுள்ள ஆரோ ஒரு மகாத்துமா இறந்து தேவ கணங்களால் அவ்விடத்துப் புதைக்கப்பட்டிருக்கின்றதென்று சொன்னார்கள். சனங்கள் அதைச் சூழவொரு மதிலெழுப்பி அவ்விடத்துக்குக் கீதானர்மெரித்து எனப் பேரிட்டார்கள். இக்காரியம் ஊரெங்கும் பேராகிக் குருடர், முடவர், நோயர்கள் தீர்த்தமாடவுந் தபம்பண்ணவும் வந்து கூடினார்கள். இச்சலத்தினால் அநேகர் சுகமடைந்தார்களென வீணாய்க் கட்டிவைத்ததால் இற்றை வரைக்கும் அது தேவஸ்தானமாயேயிருக்கின்றது. கழுதையிறந்து ஆறு வருடத்தின் பின் முன் சொன்ன வத்தகன் ஒரு முறை அவ்வழியாற் போகையில் கழுதையைப் புதைத்த சவக்குழியைப் பார்க்கவேண்டுமென்றெண்ணிப் போனபோது கோயிலையுங் குருக்களையும் நோயரையுங் கண்டு சற்றே திடுக்குற்றுத் திகைத்து நின்று ஒரு குருவிடத்திலே இங்கே ஏது கோவிலொன்று கிழம்பியிருக்கின்றதென்று விசாரித்தான். தன்னிலே தியான சிந்தையானவர்களின் நோய் மாறும்படி பூமியிலிருந்து நீரூற்றைத் தோற்றுவித்த மகாத்துமா ஒருவருடைய கல்லறை இங்கேயிருக்கின்றதென்று சொல்லக் கேட்டு வத்தகனானவன் மகாத்துமாவின் கல்லறையா! அல்லவே. என் கழுதையின் கல்லறை. நானே அதை இங்கே புதைத்தவன். இங்கே என்னுடன் நிற்கிறவர்கள் அதற்குச் சாட்சியென்று சொன்னான். இதைக் கேட்ட குருக்கள் அவனைச் சோனகனென்றறிந்து அவன்மேற் பாய்ந்து அடித்து முறித்துப்போட்டார்கள். அடுத்த வத்தகர் துணைசெய்யாதிருந்தாற் கொன்றும்போடுவார்கள். அவன் தன் கழுதையின் கல்லறையென்றே பின்னுமுறுத்திச் சொன்னபடியால் அவர்கள் அவ்வூரினிராசாவாகிய ஆச்சுவதாமென்பவருக்கு முன் அவனை அழைப்பித்தார்கள். அவனை ஆக்கினைபண்ணவேண்டுமென்று குருக்கள் கேட்டாலும் இராசா யுத்திவானும் வத்தகருக்குச் சிநேகிதனுமாயிருந்தபடியால் அதைக் கவனிக்கவில்லை. குருக்கள் தங்கள் மகாத்துமாவின் கல்லறையை இவன் கழுதையின் கல்லறையென்று நகைக்கிறானென்ன, அவனோ ஆம் சத்திய வசனமாய் அப்படித்தானென்னக் குருக்கள் இராசாவே உமக்கு முன் இப்படிப்பேசுகிறானேயென்ன, அவனோ நானதை ஒப்பனைபண்ணுவேனென்றபோது இராசா எப்படியென்று கேட்க அவன் அதினெலும்புகளைக்கிழறியென்றான். குருக்களோ நீ மகமதுமார்க்கத்தான் நீ முதற் கிறிஸ்தவனாகவேண்டும். அல்லது தேவஸ்தானத்துக்கு உன்னைப் போகவொட்டோமென்று சொல்ல இராசாவானவர் அப்படியல்ல, எலும்பைக்கொண்டொப்பனைபண்ணுதுபோகிற் கிறிஸ்தவனாகலாம், அல்லது வேற்றூர் தண்டமிடலாமென்ன, அவர்களும் அதற்குடம்பட்டார்கள். இராசா காவலாட்களை அனுப்பினார். வத்தகன் கழுதையைத் தாழ்த்த இடத்திற்போய்க் கிழறி எலும்புகளையெடுத்து இவை என் கழுதையின் தலையோடுந் தாடை எலும்புங் காலுமல்லவாவென்று சொல்லித் தலைப்பெற்ற தாயினெலும்புகளைக் கண்டாற்போல் அழுதான். குருக்களுஞ் சற்று முட்டுப்பட்டாலும்மகாத்துமாக்களுந் தேவகணங்களுங் குதிரையாகிறதறிவோமே யென்று பின் அதட்டினார்கள். பின்பு இராசாவிடத்துக்குப் போனபோது வத்தகனானவன் இக்குருக்களிலே யாரேனுமொருவர் ஒரு ய

காத்துமா குகிரையானதைத் தாங்கள் கண்டார்களென்று சத்தியவாக்காய்ச் சொல்வாரேல் என்னைத் தாங்கள் நினைத்தபடி தண்டித்துக்கொள்ளலாமென்ன, குருக்களுந் தட்டுண்டு யோவானுடைய வெளிப்படுத்தலின் விசேஷத்திற் கண்டிருக்கின்றதென்றார்கள். இராசாவும் அப்புத்தகந் தேவனுடைய திருவாக்கானதாலே தேவனே ஆக்கினையும் இவனுக்கிடுவாராகவென்று சொல்லியனுப்பிவிட்டார். *(Translated from an old No. of the Friend.)*

---

(Answer to the Question on Dreaming.)

அகத்திருள் நீக்கும்படி ஒளியைக் காலுகின்ற உதயதாரகையைப் பிரசுரஞ் செய்யும் மகா கனம்பொருந்திய துரையவர்களுக்கு வந்தனம்.

த—அம்பலவாணர் என்று கையொப்பம் வைத்தவர் கனவுகாண்பதைப்பற்றி எட்டாஞ் சஞ்சிகையிற் கேட்ட கேள்வி என்னுடைய சிற்றறிவுக்கு ஒரு மேலான கேள்விபோலிருப்பதாற் கனவு காண்பது ஏதினாலேயென்றும் எவ்விதமான காரியங்களைக் கனவிற்காண்கிறோமென்பதைப் பற்றியும் நான் சிறிது செய்யுள்களிற் கண்டிருப்பதைப் பின்னால் எடுத்துக்காட்டுகிறேன்.

"அச்செய்யுள்களாவன" (உடலறிவிளக்கம்.)

தெரிசனங் கண்டுரைப்பதென்னவென்று கேட்ட செய்திமிகான்று மாணக்கனேகேள்-உரிசையறிந்தவன் மனமுங் கண்டுகேட்டுணர்த்தியுருவறிந்தவனோடைந்துபேரும்-வரிசையுடனுணர்த்தியவர் நாதந்தன்னில் வந்தொடுங்கும்போது பன்னிரண்டுமான-பரிசமொன்றாய்க் கலந்துமொரு சுரூபமாகிப் பாறும் விந்துதனில் ஒடுங்கும் பஞ்சறிவுமற்றே. க.

விந்துபதினாறு விரலங்குலத்தில் விரைந்திரவிற் பயிந்தோடி மீழும்போது-முந்த யீராறும்புகுந்து நான்கு முன்மறித்துப் பின்தன்னிற் பாளிற்சேரும்-இந்தவுடற்குள்ளிருந்தசீவன்றனுமிப்புவியிற் கண்டதெல்லாங்கண்டிருக்கும்-வந்துயருவுருப்போல மயக்கிவிக்கும் வடிவுதனையின்னதென்று வகுத்துச் சொல்வோம். உ.

ஆறு கடல் குளம்போலும் கோவில்போலும் அரிவையர்கள் சிருவியுறவாடல்போலுஞ் சீறுமரவங்கள் புலி யானைபோலுஞ் சிவிகைபெறு துரைராணுக் கூட்டம்போலும்-சிவபூசை தவஞ்செய்வார்போலும் நிருவாணப் புருடர் சந்நியாசிபோலும்-பூசைவஞ்செய்திருந்து தவஞ்செய்கிறுப்போற் பொருந்த வடிவெடுக்கும்வெளிமயக்கிதாமே. ங.

துரத்தி மறித்தொருவர் பிடித்திழுக்கிறுப்போற்றூக்கி யெறிந்திடப்பறந்து போகுமாப்போல்-அரத்தமனை தனைக்கொளுத்தி வேகுமாப்போல் ஆன்பலவேஷமெடுத்தாடுமாப்போல்-உரத்தபரங்காட்டியிடு கனவுகண்டு வுறுமியுயிர்வெருவியச்சத்தோடெழுந்தப்-புரத்திலிருந்திடும்போது காயமிங்கே புறக்கினை கெட்டுறங்குவிதம் புகல்வோமே. ச.

செத்தச்வம்போற் கிடக்கும் வலதழிந்து சின்ங்கள் பகைசெய் தொழில்கள் தானிழந்து-கற்றகலவி சாத்திர மந்திரமிழந்து கருதுசிவபூசை யுறவின்முறையிழந்து-உற்ற பெண்டிர் பிள்ளை பணங்காசிழந்து யுடுத்ததுகிலாடை நல்லறிவிழந்து-நித்திரைகொண்டிடுமாயசூட்சியான நித்திரையுற்பனமறியார் நிறமூடராமே. ரு.

சுத்தமெனுமாசுசந் தானிழந்து சூது கவடதிவினையந் தானிழந்து-சத்தமெனு மாங்காரந் தானிழந்து தாடாண்மை செயவீரந்தனையிழந்து-மெத்தவிசாரப்படு சஞ்சலமிழந்து விரும்பியிடு மாசைசமூதருணிழந்து-நித்திரைகொண்டிடுமாய்கைச் சூட்சியான நித்திரையுற்பனமறியார் நிறமூடராமே. சா.

மதங்களபிமானமிழந் தாசையற்று மதிகெட்டுக்கிடந்துறங்கும்போதுமுன்னே-விதங்கள் பிறத்தெரிசனங்கள் கனவுகண்டு விரும்பி நிற்குமுடலுயிரை யெழுப்புமப்போது-யிதம்பெறவே இரெட்டோடிநாதந்தலை யெழுப்பிவிடும்பன்னிரண்டாங்கனவுநீங்கி-யுதம்பியெழுந் தெங்குநிறைந் தீசராகி யுடல் செவி வாய் கண் மூக்கு உயிருமாமே. எ.

உயிர்ப்புடையன் பஞ்சறிவதாகிநின்று உயர்ந்த சிங்காசனத்திருந்துமுற்றபோது-மெயிற்புடையன் இரவுகண்ட கனுக்களெல்லாமென்று நினைத்திப்படியான் கண்டதென்று-சயிக்க முடியாமலுரைத்திடுவன் கண்டஉர் தன்மையறிந்தவையொருவன் கற்றவித்தை-பயிற்புவியேழ் தனையிரவழித்து நின்று படைத்திடுவன் திடம்பிறந்துபிறப்பதாமே. அ.

பாங்கான பன்னிரண்டும் பதினாறுக்கும் பதியான முதலுங்குந்தெரிந்தபோது-நீங்காத நித்திரைவந்துற்றவாறினிலையறிந்து பயனுரைப்பர் நிலைகாணுதார்-ஆங்காரக்குருவாலுஞ் சீலராலுமறியவொண்ணுத்தரிசனத்தை அறிவித்தோங்காண்-தீங்கான நித்திரைவிட்டகன்று நீயுஞ் சிந்தை தெளிந்திருப்பவரோடிணங்குவாயே. கூ.

இச்செய்யுட்களின் கருத்து, முன்குறித்த அம்பலவாணர் அவர்களும் உதயதாரகையை வாசிக்கின்ற மற்றும் அறிவாளிகளுந் தங்கள்தங்கள் அறிவுக்கு இது தகும் நியாயமோவென்பதையும் நியாயமல்லவென்றால தற்குநியாயத்தையும் இச்செய்யுட் பிழைகளையுந்திருத்தி உதயதாரகைவழியாய் யானுமறியும்படி அறிவிக்கக் கேட்கிறேன்.

இப்படிக்கு

௲அ௱சஉ ஆ வைகாசி மீ உதீ. கனுவியார்த்திப்பிரியன்.

வேலாயுதபிள்ளை குமாரன் தம்பாபிள்ளை.

---

(On Female Education.)

*Written by an Educated Female.*

முகாமைக்காரரே,

கல்விக்குறைவிடமாகிய எங்கள் உதயதாரகைப்பத்திரிகை, எட்டாஞ் சஞ்சிகையின் கண்ணே மாதர் மாணுக்கனென்றொருவர் என்போலுமிஸ்திரி சனங்கள் கல்விகற்பது உபயோகமெனச் சிலநியாயங்களைக் காட்டியிருப்பதினால் அவருக்கிஸ்தோத்திரஞ் செலுத்துகிறேன். இவ்விசேஷித்தகாரியத்தைப் பற்றி உடுப்பிட்டியிலொருவரெழுதினதைக்குறித்து அவர் தூசனைசெய்ததாகக் காண்கின்றது. அவ்வளவுமெழுதும்படிக்கு முதற்காரணமாக நீங்களே சில வினுக்களை வினாவினதற்காக உங்களுக்கு மிகுந்த ஸ்தோத்திரஞ் செலுத்துகிறேன். முகாமைக்காரரே, பெண்பிள்ளைகளுங்கள் பத்திரிகைக்கெழுதிக்கொள்ளப்படாதென்று நீங்களெங்ஙனுங் கற்பிக்கதினாலுங் கன்னியென்றொருத்தி முன்னொருமுறையினுதயாதித்த பத்திரிகையைப்பற்றியெழுதியதை நீங்கள் மனப்பூரணமாயேற்றுப் பிரசுரஞ்செய்திருப்பதினாலும் பெண்பிள்ளைகளுங் கடிதங்களையெழுதிக்கொள்ளலாமென்று பாணிக்கவேதுவாயிற்று.

முகாமைக்காரரே, நீங்களிவ்வளவுகாலமாகவிப்பத்திரிகையைப் பதிப்பித்து வந்தும், பெண்கள் கல்விகற்பது செவ்விதென்றோர்வார்த்தையேனுஞ் சொல்லியிருக்கிறீர்களா! உங்களுக்குப் பற்பலகடிதமெழுதியிருப்பவர்களெவர்களாயினும் இத்தைக்கனவினினைத்திருப்பார்களா! ஆண்பிள்ளைகளாகிய நீங்கள் பெண்பிள்ளைகளாகியவெங்களுடைய நன்மைப்பலன்களை இவ்வளவசட்டைபண்ணுவதெவ்வளவு கொடுமையென்றுங்களுக்குத் தோன்றவில்லையே. நீங்களெங்கள் பேரிற் கொஞ்சமாகுதல் இரக்கம்வைக்கவில்லையே.—பேயுமிரங்கும் பெண்ணுக்கென்றபழமொழியையுந்தெரியாதார்போலும—ஆண்பிள்ளைகளாகிய நீங்கள் எங்களறியாமையைக்குறித்துக் கவலைப்படவிரும்புகிறதாய்க் காணவில்லை. அப்படியிருக்க மூடத்தனமுமறியாமையுமுள்ள பெண்பிள்ளைகளெப்படி யுணரப்போகிறார்கள். அவர்களாலும் முடியாதே. என்றாலும் இந்நாட்களிலே குருமாருடைய தருமத்தினாலே எங்களிற் சிலர் கல்விகற்று நல்லறிவையுற்றுணரக்கடவுள் கிருபைசெய்திருப்பதினால் பெண்பிள்ளைகளுடைய நற்சீர் விருத்தியடைய வாரம்பமாயிற்றென்று சந்தோஷிக்கிறேன் ஆகையால் என்போலும் பெண்பிள்ளைகள் கல்விகற்பது நலமென்பதை நிலைபெறுன நியாயங்களைக்கொண்டுலகினுத்தமமான பிள்ளைகளாய்க் கல்விகற்றிருப்பவர்களுடைய மைக்கணணிற் படர்ந்திருக்கிற திமிரப்படலத்தை யுரித்தொளிதோற்றப் பண்ணவும் அச்சத்துடன் துணிவுற்றிருக்கின்றமையால் பெண்பிறந்தவர்களாயிருப்பவர்களுக்கு நன்மைசெய்வதென் கடனெனக் கண்டிங்ஙன முயற்சியுற்றேன் உரோமைப்பட்டினம் ஒருமுறை அழிய வேதுவாயிருந்தபொழுதென்போலு மோர்பெண்ணினது சாதுரியவார்த்தைகளாற்றற்காக்கப்பட்டதுபோல் அடியாருடைய வற்பமுயற்சி தேவகடாட்சத்தினால் அனுகூலசித்தியடைந்தென்போலும் பெண்பிறந்தோர்க்குபயோகமாகும்படி கடவுள் கிருபைசெய்யப் பிராத்தக்கிறேன். ஆகையால் நீங்கள் பத்திரிகைதோறும் எனக்கிடந் தருவீர்களானற் பெண்பிள்ளைகள் கல்விகற்பதைப்பற்றியொழுங்காகக் கடிதங்களெழுதியனுப்பப் பிரயாசப்படுவேன்.

இக்காரியத்தைக்குறித்து உங்கணன்மறுமொழியைக் காத்திருக்கின்றவுங்களூழியக்காரி.

யாழ்ப்பாணம் சித்திரை ௴. ௨௯. ௳. சுந்தரி.

பத்திராதிபரின் குறிப்பு.

பெண்பிள்ளைகளுங் கல்வியிற்றேர்ச்சியடைவது நலமெனு நிலை பெறுத்தும்படி சுந்தரி அவர்கள்கொண்ட நற்கருத்துக்காக மிகவுஞ் சந்தோஷமாகி அவர்கள் தங்கள் கருத்தை உதயதாரகை வழியாய் நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

(Renunciation of Caste.)

மகாகனம்பொருந்திய துரையவர்களுக்கு வந்தனம்.

உங்கள் பத்திரிகையிலோர்சஞ்சிகையிலுத்தம சுவிசேஷகனென்பவர் சாதிவித்தியாசமிடையிட்ட வைப்புக்கட்டேயன்றிப் பின்னொருபொருட்பட்ட காரியமல்லவென்பதை ரூபித்துறுதிகாட்டுதற்கான அநேக உசிததிருட்டாந்தங்களையும் விவிவிய போதங்களையும் எழுதின கடிதத்தை நான் வாசித்து மனப்பூர்த்தியானேன். அவரெழுதினதற்குச் சார்பாய் நானுமோர் திருட்டாந்தவினாவொன்றை வினாவிச் சாதிவித்தியாசமேயில்லையெனமலைவறுக்கின்றேன். அதாவது; ஒருவனுடைய தகப்பன் செட்டியுந் தாய் நளத்தியுமானால் அவர்களுடைய மகனென்னசாதி? தாய் வழிபார்த்து நளவனாமென்று சொல்லிற் செட்டியாதற்குக்காரணக்கிடக்கைமுறைபின்னெங்ஙனே? அ, ஆ! செட்டித்துரையனாயினனென்று சில யூகிகளுத்தேசிப்பார்களே—"கோடிசீமானாயிற் கொம்பெனச் செட்டியாவான்" என்ற லேசுவிதியுமுண்டு. சாதிவித்தியாசமேயில்லையெனப் பெரியோர்யாவருங்கூறிப் பிரத்தியட்சமுங்காட்டுகிறார்கள்.

இதன்பேரிவினியொன்று விரிவாயெழுதிவரவிடுப்போம்.

பருத்தித்துறை } காரைக்கால் வெள்ளாளன்
வைகாசி ௫௳. } இராமநாதர் கந்தர்.

---

(On Tamil Grammar.)

மகாகனம்பொருந்திய உதயதாரகைப் பத்திரிகைக்கு.

நன்னூல் கற்கப்புகுந்த ஓர் மாணாக்கன் நன்னூலில்வினாவுங்கடா- உதயதாரகையென்னும் பத்திரிகையின் வழியாய்ச் சகலருந் தங்களுக்கு விளங்காத நற்கருத்துகளை வினாவியறிகின்றமையால், நானும் நன்னூலில் எனக்கு விளங்காத ஓர் நற்கருத்தை வினாவியறிய வேண்டுமென்றுணர்வுற்றேன். அஃதென்னவெனில், நாவினியல்பை விசேடித்த விதியினோரிருபாயிரந் தோற்றியெனக் கூறிய வழி, எந்நூற்குமிருபாயிரமெனவென் சிற்றறிவின் விளக்கமாயிருக்கின்றதாகையானிப்பாயிரங்களுட் பொதுப் பாயிரத்தை எந்நூற்கு மிலக்கணமாகிய நன்னூற்குக் கூறினதாயிராதது காரணம்பற்றி யஃதிஃதெனவோர்ந்திடக்கற்றறிவுடைய பெரியோர்சிற்றறிவுடையேனுக்குச் சற்றறிவிக்கவேண்டும். இப்படிக்கு

வட்டுநகர் சாத்திரப் பள்ளிக்கூடம் தில்லையம்பலம்
இராமலிங்கன்.

---

(On Transmigration.)

மறுபிறப்பு உண்டென்று சைவசமயத்திற் சிறிது மகாத்துமாக்களன்றி மற்றும் அநேக தவத்திகள் இருஷியேசுரர்கள் முதலான பெரியோர்கள் சொல்லியிருக்கிற் படியாலும் இச்சமயத்தைச் சார்ந்த சமயங்களேயன்றி மற்றெந்தச் சமயத்தவர்களும் அத்தை யில்லையென்கிறபடியாலும்; இத்தை வாசிக்கிற சைவசமயத்தவர்களாகிய முற்றுமுணர்ந்த பெரியோர்கள் இதுண்டென்று அத்தாட்சி பண்ணவேணும், அல்லது இது தப்பறை. கிறிஸ்துமார்க்கத்திற் சொல்லியிருக்கிறதே உண்மையென்று ஏர்த்துக்கொள்ளவேண்டும். இதன்றி இன்னும் அநேகவினாக்கள் எனக்கிருக்கிற சமசியத்தால் தோற்றுகின்றன, அவைகளையும் நான் எழுதும்போது அப்படியே நீங்கள் விடைகொடுக்கவேணும்.

இங்ஙனம், தங்களூழியக்காரன்.

யாழ்ப்பாணம். ௨௨௳. பங்குனி௴. இராமன் கிட்டினன்.

---

உதயதாரகாவிநோதருக்கு.

[A Medical Query.]

துரைகளே,

வைத்தியத்திலோர்வினா வினாவுகிறேன். அஃதென்னெனின், முதலாவது, எல்லா நோய்க்காரருக்கும் உப்புப் புளிமுதலியவற்றைத் தள்ளிஅரும் பத்தியத்தில் வைத்து மருந்துசெய்துவதே இத்தேசத்தில் முழுதும் வழக்கமாயிருக்கின்றது. ௨வது. பெருநூல் அல்லாத சிலபல வைத்திய சாஸ்திரங்களில் உப்புப் புளி முதலியவற்றைத் தவிர்க்கச் சொல்லியிருந்தாலும் அவைகளெல்லாம் மகாகனம்பொருந்திய முனியேசுரர்களாற் சபிக்கப்பட்டிருக்கின்றனவே. ௩வது. அப்படியிருந்தும் அச்சபிக்கப்பட்ட நூற்களிற் சொல்லியபடி உப்புப் புளி முதலியவற்றைத்தள்ளித் தற்சமயத்தில் நோய்க்கும் நோய்க்காரர் பிரியத்திற்கும் ஏற்ற புசிப்பனவற்றைக் கொடாமற் பரிகரிப்பதினால் அதிக கேடாய் முடிந்ததைப் பிரத்தியட்சமாகக் கண்டறிந்தோம். ௪வது. ஆயுள் வேதத்திலோர் பகுதியாகிய தேவ வைத்தியத்திற் சொல்லிய செந்தூரம் முதலியவையே பிரதான அவிழ்தம். அவ்விதமான அவிழ்தங்கள் செய்தற்குக் குருவின்றியமையா, அக்குரு உப்புப்புளி முதலானவைகள் சேர்த்து உண்டாக்கப்படுகின்றன. ௫வது. ஆகையால் அவ்வவிழ்தங்களும் உப்புப்புளி முதலியவற்றை முதற்காரணமாகக்கொண்டிருக்கின்றனவே. அப்படியிருக்க நோய்க்கும் அந்நோயாளி விருப்பத்திற்குமேற்ற புசிப்பனவற்றைக் கொடாமல் அரும்பத்தியத்திற் போடவேண்டியதில்லையென்பதற்குதாரணம்.

தன்வந்திரிவாகடம்.

சௌமியகாண்டம்.

துய்த்திடும்விருப்பந்தோன்றத்துயிலடைக்கிடையூறி
ன்றிப்
பத்தியமற்பமாகப் பருவரறேன்றுவண்ணம் என
வும்,

சஷடமுனி நிகண்டு.

சாரம்விட்டாற்காரமில்லை நிஷ்காரமாச்சுச் சகலகு
ருச் சகலகருத்தயங்கிப்போச்சு—எ—ம்
அப்பனேலவணமொடுகாரசாரமறிவாகச் சொல்லிவி
ட்டேன்முப்பதுக்குள்—எம்,

இவற்றிற்காதாரமாகச்-சிவஞான சித்தியார்.

மண்ணுளே சிலவியாதி மருத்துவனருத்தியோடு
திண்ணமாயறுத்துக்கீறித் தீர்த்திடுஞ்சிலநோயெல்லாங்
கண்ணியகட்டிபாலுங் கலந்துடனருத்தித்தீர்க்கும்—எம்.

சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆகையால் நோய்க்காரரின் இச்சைக்கும் நோய்க்கும் ஏற்ற புசிப்பைக் கொடுத்து அதற்காகிய அவிழ்தம்பண்ணாமல் நோயை அனுபவிக்கிறவர்களை மேற்சொல்லியபடி அரும்பத்தியத்தில் வைத்து வேதனைபண்ணுவது சரியோ சரியல்லவோ என்பதை முற்றுணர்ந்த ஆயுள் வேதியர் யோசனைபண்ணி இதிற் பிழையிருந்தாற் பொறுத்து நல்விடையை உங்கள் உதயதாரகையின் வழியாக அறிவிக்க மன்றாடிக் கேட்கிறேன். இப்படிக்கு

௲௮௱௪௨ஆ. சித்திரை௴. ௧. தேதி
உடுப்பிட்டி ஆயுள்வேதவிநோதன்.

---

மாயவித்தைமலைவை விலக்கல்.

(On the pretended miracles of the heathen.)

மகா கனம்பொருந்திய முகாமைக்காரரே,

சாற்றரிய நீரினிற்றம்பனஞ் செய்தலுந் தாவியதன்மேலேகலுந் தணலினுளிருத்தலுந்தழல்கையிலேந்தலுந் தலையறுத்தெதிர்காட்டலுந்-தனதுகண்களைவாங்கியெதிராகநீட்டலுந்-தயங்குநாவறுத்தெறிதலுந்—தனையெடுத்திடுமையுந் தனைமறைத்திடுமையுந்தையல்வசியத்தின்மையும்—போற்றுமெட்சணிகளும் பூதங்களோட்டலும் பொன்வெள்ளிசெயும்வித்தையும் புதல்வரைப்பெற்றிடக் குளிசங்கள்கட்டலும் போகிக்கமணி செய்தலும்—புகைதானுமின்றியே சூதமுதல்கட்டலும் புகலுமாரணவித்தையும்-பூமிவட்டஞ்செலக் குளிகைசெய்வித்தையும் பொசிப்பகற்றிடு வித்தையுங்-கூற்றைமறித்திடச்சமாதியிலிருத்தலுங் கூடுபோய்க்கூடேறலுங்—கூலவுநரைதிரைமாற்ற கற்பமதுகொள்ளலுங்கோகரணகெசகரணமுங்—கூறுமிந்திரசாலமயேந்திரசாலமுங் கோபுரம்விழுங்குதொழிலுங்-குறளியாற்பல்லக்குமீதேறுவித்தையுங்கோடிசெப்பிடுவித்தையும்—காற்றையுட்டம்பனஞ்செய்து பேலெழுதலுங் காட்டுகண்கட்டுதொழிலுங் - கழறுபலதேவதைவசியமுங் குளத்துமீன்கரையேறிவரச்செய்தலுங் - கருதுமிவைமுதலான பலகோடிவித்

தையுங் காட்சியிற்காணில் பொய்யே —காரணனை நித்தியபரிபூரணனை வழிபடுங்காட்சியொன்றஃது மெய்யே.

இவற்றினுட் சில கருவிகளாலுங்கைச்சமர்த்தினாலுஞ் செய்வனவன்றிச் சில அசம்பவமாகவேயிருக்கின்றன. சிலர் இவைகளைத் தேவவல்லமையாற் செய்தோமென்று உலகத்தாரை வஞ்சிக்கிறார்கள். வஞ்சிப்போர் வஞ்சனையையும் வஞ்சிக்கப்படுவோர்மயக்கத்தையும் முகத்திற்கண்ணாடிபோன்மேற்கண்ட முறையே தெளிவாக்குவோம். இப்படிக்கு சத்தியப்பிரியர்

க. நாகமுத்தாபிள்ளை பொன்னங்கால்
சுப்பிரமணியக்கவிராயர்.

---

## சகத்தாதிசாட்சி.
[The world not eternal.]

மகா கனம்பொருந்திய முகாமைக்காரரே,

அதிட்டானசைதன்னியத்தின்கண்ணே சகத்துஅபிவியாபகமான காலையில் அஃது அநாதிநித்தியமென்றும், அவ்வதிட்டானசைதன்னியத்தினின்று அச்சகத்து ஔபசிலெட்மான காலையில் அஃது ஆதியநித்தியம் -என்றும், சிலர் சொல்வது ஆகமசாஸ்திரங்களுக்கு அத்தியாசமே. ஏனெனின், அநாதிகாரணவஸ்துவாகிய பிரமத்தினிடத்திலே ஆதிகாரிய வஸ்துவாகிய பிரபஞ்சந் தோன்றியது—இப்பிரபஞ்சத்தைப்பிரமத்தோடுசேர்ந்த அநாதிநித்தியபதார்த்தமென்றதெப்படி? அப்படியானால் அந்தப் பிரமத்தைப் போல இந்தப் பிரபஞ்சமுஞ் சாசுவதமாக இருக்கவேண்டுமே. அவ்வாறில்லாமற் பிரபஞ்சந் தோன்றி அழியவேண்டியதென்னை? ஆதலாற் சமட்டிவடிவாகிய மாயை அநாதி என்றும்—வியட்டி வடிவாகிய சகத்து ஆதியென்றும், ஆசுமிகள் சொன்னவை சரியே. இன்னுமாகம சாஸ்திரங்களில்லாமற் பரத்துக்குத் தோற்றமுமொடுக்கமுமில்லையென்றும் சகத்துக்குத் தோற்றமுமொடுக்கமுமுண்டென்றும் பிரத்தியட்சமாக அறியலாம். பஞ்சலட்சணப்பிரயோகப் பயன், நித்தியஞ் சுத்தமாயை நிலைபெறு தசுத்தமாயை என்றதும்-வாதிட்டம்-பரமமேயெங்குமென்றுமுண்டாகும், என்றதும் -அந்தமற்றென்றாய் விகற்பமற்றறிவாயழிவிலாப் பிரமமேயிருக்க என்றதும்; பிரபுலிங்கலீலை பரசிவபிரமமென்னும் பாடல்முதலாக நான்கு பாடலும், வேதாந்தசூடாமணி—நீங்கியவிகாரப்பிரமமாமீசன் என்னும் பாடல் முதலாக நான்குபாடலுங் காண்க.

இப்படிக்கு களத்தூர்,
சுவாமிமுதலியார் குமாரன் முருகேசமுதலியார்.

---

## An explanation of a verse from the Old Saying (மூதுரை.)
சமரசம்.

மூதுரையில், "கவையாகிக்கொம்பாகிக் காட்டகத்தேநிற்கு
மவையெல்லாமல்ல மரங்கள் சவைநடுவே
நீட்டோலைவாசிக்க நின்றான்குறிப்பறிய
மாட்டாதவனேமரம்"

இச்செய்யுள் பாலெனவெள்ளையும் பாவலர் பாவினுள்வெள்ளையும் பாவுக்கசைசீரும் படித்தவர் நாவுக்கிசைசீருமாய்ப் பண்டுதொட்டுவழங்கி வருகின்றது. கம்பென வழங்கிய சொல் உலக வழக்கிலன்றிச் செய்யுள் வழக்கிலியைந்ததன்று. ஆதலிற் கொம்பென்பதே நயந்ததிங்கு. "நல்லமரமல்ல" என்பதும் "சவையகத்து" எனபதும் பாடமாயிருக்கின்றன "நீட்டோலைவாசிக்க நின்றான் குறிப்பறிய மாட்டாதவனேமரம்" என்றதை நீட்டோலைவாசியாநின்றான் குறிப்பறிய மாட்டாதவனே மரம். எனத்திரித்து நீட்டிய வோலையை வாங்கி வாசிக்கமாட்டாமல் மலைத்து நின்றவனும் ஒருவர் குறிப்பை யின்னதென்று அறியமாட்டாதவனுமே நல்ல மரமாம் என்று சென்னைபட்டினத் தச்சுப்பிரதியிலும் மானிப்பாயில் அச்சுப் பிரதியிலு மெழுதப்பட்டிருக்கின்றது. இஃது கற்றவர் சொற்ற மூதுரைக்கெதிருற்றவர் தர்க்கமோதுரையாம். அன்றியும் வாசியாநின்றான் என்பது வாசிக்கமாட்டாமல் மலைத்துநின்றான் எனச் சொற்கள் வருவிக்கப்படுதலானும் வாசிக்கின்றான் என உடன்பாட்டு வினைப்பயனுங் கொள்ளுந்தன்மையானுமது பாடமின்மையானும் வாசியாநின்றான் எனறு கூறுதல் முன்னவர் பாடலை மாறுதலாம், இனி நீட்டோலைவாசிக்க நின்றான் குறிப்பறிய மாட்டாதவனே மரம். என்றதற்கு என் சிற்றறிவிற்றோன்றிய மட்டுமெழுதுகிறேன். நீட்டிய வோலையை வாசிக்கமாட்டாதவனுந் தன்னெதிர் நின்றவனது குறிப்பின்னதென வறியமாட்டாதவனுமே மரமாமென்றவாறு. "வாசிக்க, அறிய" என்னுமிவ்விருவினையெச்சங்களும் மாட்டாதவன், என்பதில் எதிர்மறை முற்றுவினைகொண்டு வாசிக்கமாட்டாதவன், நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் எனத் தனித்தனிமுடிந்தன. மாட்டாதவன், கடைநிலைத்தீபம். நின்றான், வினையாலணையும் பெயர். நின்றான்குறிப்பு, நின்றானது குறிப்பென விரிந்தது. கல்லாதவனையுங் குறிப்பறிய வொல்லாதவனையும் முதற்பிறப்பான மனிதரினின்றும பிரித்துக் கடைப்பிறப்பான மரமாமெனப் பொருள் விரித்து நிற்றலின் மாட்டாதவனேயென்னு மேகாரம் பிரிநிலையில் வந்தது. நீட்டோலை, தேமாங்காய். வாசிக்க, தேமாங்காய். நின்றான், தேமா. குறிப்பறிய, கருவிளங்காய். மாட்டா, தேமா. தவனே, புளிமா, மரம், மலர் எனமுடிந்தது. இவற்றைச் சமஞ்செய்து சீர்தூக்குங் கோல்போல்பவரேயுய்த்துணரக்கடவர்.

வல்விட்டித்துறை இப்படிக்கு
சித்திரை மீ. உ தி. கதிர்காமர் ஏகாம்பரம்.

---

## கண்வளர்வாரைக் கடிதினெழுப்பல்.

உதயதாரகையின் முகாமைக்காரருக்கு
மகா கனம்பொருந்திய அய்யாவே,

திருவெண்ணை நல்லூர் கார்த்திகேயர் குமாரன் இராமலிங்கபிள்ளைஅவர்கள் கடாவிய கடாவுக்கு, கு. கதிரவேற்பிள்ளையும், தாமோதரம்பிள்ளை சுதன் சிதம்பரப்பிள்ளையும் விடையெழுதாமல் மௌனமாயிருப்பது மிகுந்த ஆச்சரியமாகவிருக்குது. மேற்குறித்த இராமலிங்கபிள்ளை அவர்கள் உசாவிய உசா சரியே சரி. ஒன்றில் அவர்கள் துயில்வதை விட்டெழுந்து அவ்வினாவிற்கு உத்தரமெழுதவும் அல்லது அவர்கள் தங்களுக்கு விளங்கவில்லையென்று எழுதவும் அப்படியே செய்யாமல் இருப்பது சரியல்லவென்றுணர்ந்து இருவரும் அதற்கடுத்த வழியை உதயதாரகை வழியாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டுநிற்கிறேன். இப்படிக்கு

௲அ௱சஉ ஆ. வைகாசி. மீ. ௰எ தி. மட்டைநகர்
சோமநாதர் தவக்குமாரன் விசுவநாததேசிகர்.

---

## பயனயமின்றிக் கிறுக்கிய கடாக்களை யுறுக்கிய திறன்மொழி.

உதயதாரகைப் பத்திரிகையை நடாத்துமுத்தமவையாவவர்களுக்காசீர்வாதம்.

